Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 317

வெள்ளிக்கிழமை
10 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## அடுத்த வருடம் மாகாணத் தேர்தல்

கொழும்பு, ஒக். 10
மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

11

காற்றாலை அமைக்கும் விடயத்தில்

# ஜனாதிபதியுடன் எங்களுக்கு எந்த ஒப்பந்தமும் கிடையாது

## காற்றாலை அமைப்பதில் அரசு உறுதி மக்களுடன் உரையாடியே எமது முடிவு

### மன்னார் ஆயர் நேற்று அறிவிப்பு

**மன்னார், ஒக்ரோபர் 10**

மன்னாரில் காற்றாலைகளை அமைக்கும் விடயத்தில் ஜனாதிபதியுடன் நாங்கள் எந்தவொரு ஒப்பந்தத்திலும் ஈடுபடவில்லை. மக்களுடன் கலந்துரையாடிய பின்னரேயே எமது தீர்மானம் அமையும். இதை ஜனாதிபதியிடமும் தீர்க்கமாகக் கூறியுள்ளேன் - இவ்வாறு மன்னார் ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

11

## வெடுக்குநாறி விவகாரம்; ரி.ஐ.டி.யினர் விசாரணை

### முன்னாள் நிர்வாகத்தினரிடம் நேற்று வாக்குமூலம்

வவுனியா, ஒக். 10
வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் செயலாளர் ஆகியோர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

11



செம்மணியில் அமைக்கப்பட்டிருந்த

## அணையாவிளக்கு தூபி விஷமிகளால் இடித்தழிப்பு

### நேற்று மாலையே மீண்டும் அமைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ்ப்பாணம் அரியாலை செம்மணி வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்குப் போராட்ட நினைவுத் தூபி நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.
செம்மணி மனிதப் புதைகுழி மற்றும்

11



யாழ்ப்பாணம் - அரியாலையில்


## குப்பை கொட்டுவதை எதிர்த்த எண்மர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கழிவுகளைக் கொட்ட வந்தவர்களை வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எட்டுப் பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அரியாலையில் நல்லூர் பிரதேசசபையால் குப்பைகளைத் தரம் பிரிக்கும்மத்திய

11

அத்துமீறிய மீன்பிடி

## 47 இந்திய மீனவர்கள் ஒரே நாளில் கைது!



யாழ்ப்பாணம், ஒக். 10
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

11



## நல்லிணக்க ஆணைக்குழு வெகுவிரைவில் அமையும்!

### வெளிவிவகார அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 10
உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பதற்குரிய சட்டமூலம் வெகு விரைவில் நிறைவேற்றப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.
நாடாளுமன்

11

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

## பிரதான சூத்திரதாரியை கண்டறிந்தது அரசாங்கம்

### நிசாம் காரியப்பர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 10
உயிர்த்தஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தெரிவித்த கருத்துக்களுக்கு

11

முச்சந்தி முரளி

'ஆராரையோ பற்றியெல்லாம் வதந்தி கட்டி கடைசில ஆயரைப் பற்றியும் வதந்தியை கட்டிப்போட்டாங்கள் கண்டியளோ'

## மாணவிகளுக்கு பாலியல் சீண்டல்; ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவிகளுடன் அங்கசேட்டையில் ஈடுபட்டார் என்று ஆசிரியர் ஒருவருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள்

11

## உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்தாரியை நாடாளுமன்றில் வெளிப்படுத்துங்கள்!

### தயாசிறி ஜயசேகர வலியுறுத்து



கொழும்பு, ஒக். 10
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான பிரதான சூத்திரதாரி கண்டறியப்பட்டிருந்தால், அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4219 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 07 21 65 68 |
| விசேட எழுத்து | V |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1286 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 24 28 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0245 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 0 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2324 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கங்கள் | 10 17 52 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5977 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 0 4 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2007 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 11 23 42 63 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0552 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 7 3 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 09.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0093 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 12 14 36 45 |

# இலங்கையை மென்போக்குடன் அணுகும் ஐ.நா. உறுப்பு நாடுகள்

*சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் அமைப்பு குற்றச்சாட்டு*

**கொழும்பு, ஒக்.10**

**தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசாங்கத்தின் அத்துமீறல்கள் தொடரும்நிலையில் சர்வதேச சமூகம் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் போன்ற உள்ளகக் கட்டமைப்புகளைத் தொடர்ந்தும் ஊக்கு வித்துவருகின்றது என்று இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக் கான மக்கள் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச நீதிப்பொறிமுறையை நிறுவவேண்டும் என்று பாதிக்கப் பட்ட தமிழ் மக்களாலும், புலம் பெயர் தமிழர்களாலும் முன் வைக்கப்பட்ட கோரிக்கை முழு மையாகப் புறக்கணிக்கப்பட்டுள் ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் பேரவையில் நிறைவேற்றப் பட்டுள்ளதீர்மானத்தைஇலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற மீறல் கள் தொடர்பான ஆதாரங் களைத் திரட்டும் செயன்முறை காலநீடிப்பு செய்யப்பட்டிருப் பதை வரவேற்கும் அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் இலங்கை அரசாங் கம் தொடர்பான மென்போக் கான அணுகுமுறை தொடர்பாக தீவிர கரிசனை அடைகின்றோம்.

இந்தத் தீர்மானமானது இலங் கையில் இடம்பெற்ற குற்றங்களி னதும், தற்போது இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களி னதும் பாரதூரத்தன்மையைப் பிரதிபலிப்பதற்கும், தமிழ்மக்கள் மிகமோசமான இழப்புக்களுக்கு முகங்கொடுத்தமையை அங்கீக ரிப்பதற்கும் தவறிவிட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படு கொலை இடம்பெற்று 16 வருடங் கள் கடந்துள்ள நிலையில், தமி ழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சர்வதேசச் சட்டங்களுக்கு முர ணான பெரும் குற்றங்கள் தொடர்பில் இதுவரை எவரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத் தப்படவில்லை.

இந்தப் பின்னணியில் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் தமிழர் களுக்கான ஏற்றுக்கொள்ளத் தக்க அரசியல் தீர்வு என்பன இன்றி நியாயமான நல்லிணக் கம் சாத்தியமில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றோம் - என்றுள் ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 09.10.2025 | வியாழக்கிழமை | 0685 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| R | 7 8 4 2 0 9 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.10.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2951 | J | 28 52 62 71 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.10.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 47 61 70 72 | 5012 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 09.10.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0787 | 06 20 34 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.10.2025 | வியாழக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♉ | 12 24 37 44 | 4663 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 09.10.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| X | 12 | 09 10 37 41 | 2127 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 09.10.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 21 27 28 52 | 2777 |

# முதுகெலும்பற்ற அரசாங்கம்!

*சாடுகின்றார் நாமல்*

கொழும்பு, ஒக்.10

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரத் தில் வாய்மூலம் எதிர்ப்புத் தெரிவித் தாலும், வாக்கெடுப்பைக்கோர வில்லை. வாக்கெடுப்பைக் கோரு வதற்கு அரசாங்கத்துக்கு முதுகெ லும்பு இல்லையா? என்று நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற விவாதம் ஒன் றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

யாரை நீங்கள் மகிழ்விக்க முயல் கிறீர்கள்? புலம்பெயர் தமிழ் அமைப்புகளையா? அல்லது விடு தலைப் புலி ஆதரவாளர்களையா? ஐ.நா. விவகாரத்தில் இரட்டை வேடம் அணிவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும்.

பொலிஸாரைப் பயன்படுத்தி அரசி யல் செய்யமுடியாது. தயவுசெய்து பொலிஸை அரசியல்மயமாக்கு வதை நிறுத்துங்கள். பொலிஸ் ஆணைக்குழுவின் கௌரவத்தை சீர்குலைக்கவேண்டாம் என்று கோருகின்றோம் - என்றார். (எ-இ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

*அரசாங்கம் தெரிவிப்பு*


கொழும்பு, ஒக்.10

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. பாதுகாப்புத் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படுமாயின் கோரிக்கை முன்வைக்கலாம். அது பரிசீலனை செய்யப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலு வல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற் றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதிகளின் உரித்துரி மைகள் (நீக்குதல்) சட்டம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு சில சிறப்புரிமைகள் மற்றும் சலுகைகள் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இயற்றப்பட்ட சட்டத்தில் பாதுகாப்பு களைக் குறைப்பதாக எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு இந்தச் சட்டத்தால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை- என்றார். (க-இ)

# பீடி விலை அதிகரிப்பு



கொழும்பு, ஒக்.10

பீடியின் விலை அதிகரிக்கப்படும் இன்று முதல் அதிகரிக் கப்படும் என்று அகில இலங்கை பீடி உற்பத்தியாளர்கள், பீடி இலை மற்றும் புகையிலை இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பால், இரண்டு அங்குல பீடியின் சில்லறை விலை ரூ.15 ஆக வும், சிவப்பு நூல் கொண்ட இரண்டு அங்குல பீடி ரூ.13 ஆக வும் அதிகரிக்கும் என்று சங்கம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# வெளிநாட்டுக்கடன் 37 பில்லியன் டொலர் உள்நாட்டுக்கடன் ரூ.19.6 ட்ரில்லியன்

கொழும்பு,ஒக்.10

இலங்கையின் நிலுவையிலுள்ள வெளிநாட்டுக்கடன் 37 பில்லியன் அமெரிக்க டொலராகவும் உள்நாட்டுக் கடன் 19.6 ட்ரில்லியன் ரூபாவாகவும் உள்ளது என்று தெரியவந்துள்ளது.


நாடாளுமன்றத்தின் பொதுநிதிக்குழு வின் (கோப்) தலைவர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அரச கடன் முகாமைத் துவ அலுவலகத்தின் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் கூட்டத்தின்போது, நடப்பு ஆண்டுக்கான கடன் திருப்பிச் செலுத்தும் தவணைகளின் துல்லிய மான விவரங்களை அதிகாரிகளால் வழங்க முடியாமை குறித்துத் தலைவர் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அரசின் கடன் பெறுதல் மற்றும் திருப் பிச் செலுத்தும் முழுப்பொறுப்பையும் இந்த அலுவலகமே கொண்டிருப்ப தால், கடனைத் திறம்பட நிர்வகிக்கத் தேவையான திறமையான பணியாளர் களை அரச கடன் முகாமைத்துவ அலுவலகத்தில் நியமிக்க வேண்டிய தன் அவசரத்தேவையையும் அவர் வலியுறுத்தினார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மத்தியில் மனவுளைச்சல் உயர்வு



கொழும்பு,ஒக்.10

**பல்வேறு சமூகக் காரணிகளினால் தற்போது பாடசாலை மாணவர்கள் சில வகையான மன உளைச்சலுக்கு உள்ளாகிவருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளதாக மனநல சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் லக்மினி மகோதரத்ன தெரிவித்துள்ளார்.

"2024ஆம் ஆண்டில், இலங்கையின் பாடசாலை ஒன்றில் சுகாதார் ஆய்வு நடத்தப்பட்டது. மாணவர்களின் தரவுகளை ஆய்வுசெய்த போது, 22.4 வீத மாணவர்கள் தனிமையாக இருப்பதைக் கண்டறிந்தோம்.

13 முதல் 17 வயதுடைய மாணவர்களில், 11.9 வீதம் பேர் மன உளைச்சல் காரணமாகத் தூங்குவதில் சிரமம் இருப்பதாகக் கூறியுள்ளனர், 18 வீதமானோர் மனச்சோர்வின் அறிகுறிகளைக் காட்டவில்லை. அதாவது, 75 வீத மானமாணவர்களுக்குநெருக்கமான நம்பிக்கை இல்லை என்பது ஆச்சரியப்படுத்துகிறது. இதேவேளை உலக நாடுகளில் இளைய சமுதாயத்தினரிடையே அபாயகரமான நிலைமைகளால் ஏற்படக்கூடிய மனநலப் பாதிப்பு 10 தொடக்கம் 13 சதவீதமா கக் காணப்படுகின்றபோதிலும் இலங்கையில் 24 சதவீதமானோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பது அவதானம்மிக்க விடயமாக உள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# உயிர்மாய்ப்புகளும் இலங்கையில் உயர்வு

கொழும்பு,ஒக்.10

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 3 ஆயிரத்து 500 உயிர்மாய்ப்புகள் பதிவாகின்றன. தற்போது சராசரியாக நாளொன்றுக்கு எட்டு உயிர்மாய்ப்புகள் இடம்பெறுகின்றன என்று தேசிய மனநல நிறுவனத்தைச் சேர்ந்த உளவியலாளர் மருத்துவர் சஜீவ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

1996ஆம் ஆண்டில், இலங்கை உயிர்மாய்ப்பு விகிதத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 47ஆக காணப்பட்டு உலகில் இரண்டாவது இடத்தில் இருந்தது.

அதன்பின்னர் கணிசமாகக் குறைந்து இப்போது அது ஒரு இலட்சத்துக்கு 15 ஆக உள்ளது.

கடந்த 25 வருட காலப்பகுதியில் மனநலம் தொடர்பாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 33 ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், வயது வந்தவர்களில் 30 வீதமானோர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன், 39 வீதமானோர் கடுமையான மனநோய்க்கு ஆளாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மனநலசேவைகளுக்கு உரிய அங்கீகாரமும் முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும். உயிர்மாய்ப்புகளுக்கும் மனஉளைச்சலே பிரதான காரணமாக உள்ளது - என்றார். (ச-இ)

# மஹிந்தவுக்காக சிறிதம்மதேரர் உண்ணாவிரதம்

கொழும்பு, ஒக்.10

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேரிபெஹே சிறிதம்ம தேரர் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தங்காலை, கார்ல்டன் இல்லத்துக்கு அருகில் உள்ள டி.எஸ். சேனநாயக்க சிலைக்கு முன்பாகவே அவர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். (எ-இ)

# ஐ.நா.பேரவை பிரேரணை; விவாதத்துக்கு இணக்கம்

UNITED NATIONS
SRI LANKA

கொழும்பு,ஒக்.10

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணை தொடர்பில் சபையில் விவாதம் நடத்துவதற்கு ஆளுங்கட்சி இணங்கியுள்ளது.

நாடாளுமன்றம் சபாநாயகர் தலைமையில் நேற்றுக் கூடியபோது ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அரசாங்கம் ஏன் வாக்கெடுப்புக் கோரவில்லை? உள்ளகப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்குரிய திட்டங்கள் எவை? என்பன உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் விசேட உரையாற்றினார்.

அவர் உரையாற்றிய பின்னர் இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த இடமளிக்கப்படவேண்டும் என்று எதிரணி பிரதம கொறடா கயந்த கருணாதிலக்க கோரிக்கை விடுத்தார். அத்தற்கு ஆளுங்கட்சி இணங்குகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் பதிலளித்தார். (ச-44)

# 'மின்கட்டணத்தை உயர்த்தாதே' நிறுவனங்கள் சிவப்புக்கொடி!

கொழும்பு,ஒக்.10

இலங்கை மின்சாரசபையினால் மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்குப் பல நிறுவனங்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

மின்கட்டணத்தை அதிகரிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு மின்சாரசபை கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பிலேயே இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சபையின் பலவீனமான முகாமைத்துவம் மற்றும் நிதிக்கட்டுப்பாடு என்பவற்றுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்த பிரதிநிதிகள், "மின்கட்டணத்தை அதிகரிப்பதன்மூலம் இந்தச் சுமைகள் அனைத்தையும் மின்சாரப்பாவனையாளர்கள்மீது சுமத்தப்படவுள்ளன. மின்கட்டணத்தை உயர்த்துவதற்கான சபையின் யோசனையை ஒரு போதும் அங்கீகரிக்கவேண்டாம். நியாயமான எரிசக்தித் தேவையை வழங்குவது எந்தவொரு அரசாங்கத்தினதும் பொறுப்பு" என்றும் சுட்டிக்காட்டினர். (ச-இ)




## ஆக்கிறதைரியல்லாம் அழிச்சு உடை!

ஆக்கிறதுக்கு ஆயிரம் நாள், அழிக்கிறதுக்கு அரைநொடி எண்டு சொல்லுவினம். எதையுமே அழிக்கிறது சுகம். ஆக்கிறதுதான் கஷ்டம். எங்கட ஆக்களுக்கு எப்பவுமே சுகமான வேலைபார்த்துத்தானே பழக்கம்.அதால எதையுமே அழிக்கிறதில நாங்கள் கெட்டிக்காரர். இப்பிடி எல்லாத்தையும் ஆவணப்படுத்தாமல், அழிச்சதாலதான் இப்ப நாங்கள் தான் இந்த நாட்டின்ர பூர்வகுடியள் எண்டு நிரூபிக்க ஏலாமல் கிடக்கு. ஆனால் சிங்களவர் கெட்டிக்காரர். தமிழாக்களின்ர வரலாறைக்கூட மாத்தி , தாங்கள் தான் பூர்வகுடியள் எண்டு எண்பிக்கிறமாதிரி ஆதாரங்களை செற்பண்ணி எல்லாத்தையும் தங்கட கையுக்க கொண்டுவந்திட்டினம். ஆனால் நாங்கள் அணிலேற விட்ட நாயள் மாதிரி, எல்லாத்தையும் துலைச்சுப்போட்டு, நடுத்தெருவில நிக்கிறம். சரி, முந்தின வரலாறுகளைத்தான் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் அழிச்சிட்டம் எண்டு பார்த்தால், இப்பகூட எங்கட ஆக்களுக்குப் புத்திவரேலை எண்டதுதான் கடுங்கவலையாக் கிடக்கு.

கனகாலத்துக்குப் பிறகு இஞ்ச உணர்வுபூர்வமா, அரசியல் கலப்பில்லாமல், கனபேர் திரண்ட போராட்டமெண்டால் அது 'அணையாவிளக்கு' போராட்டம்தான். வழமை மாதிரி நாலைஞ்சு மணித்தியாலம் கையில பதாகையைப் பிடிச்சுக்கொண்டு, கத்திக்குளறிப்போட்டு கலைஞ்சுபோகாமல், அணையாவிளக்குப் போராட்டம் வித்தியாசமா நடந்தது. செம்மணிப்புதைகுழியள் இருக்கிற நிலத்தில, நாலைஞ்சு நாள் இரவுபகலா இந்த 'அணையாவிளக்கை' எரியவைச்சு, அந்த நெருப்புக்கு அர்த்தம் குடுக்கிறமாதிரி செம்மணி பற்றின கதை, கவிதையளை வாசிக்கிறது, செம்மணிப் புதைகுழியை முந்தித்தோண்டேக்க நேரில போய்ப் பார்த்தவையைக் கூப்பிட்டு கதைக்க வைக்கிறது, காணாமல்போன ஆக்களின்ர வீடுகளில இருந்து எண்ணெய், திரி கொண்டந்து அணையாவிளக்கை இன்னும் பெரிசா எரியவைச்சது எண்டு எல்லாரையும் அதுக்குள்ள கொண்டுவந்து செம்மணிக்காண்டி ஒட்டுமொத்த தமிழாக்களும் குரல் குடுக்கிறமாதிரித்தான் அந்தப் போராட்டம் இருந்தது.

அந்தப் போராட்டம் நடந்ததுக்கு இப்ப சாட்சியா இருந்தது அணையாவிளக்கு வைக்கப்பட்ட ஒரு சின்னத்தூபிதான். போராட்டத்துக்காக அவசரமா சிமெந்தால கட்டுப்பட்ட அந்த தூபியை காலாகாலத்துக்கும் அதிலையே வைச்சு, செம்மணி எண்ட சோகத்தை எல்லாரும் அறிஞ்சு கொள்ளோணும் எண்டுதான் போராட்டத்தை நடத்தினவை விரும்பினவை.அதால அந்தத் தூபியை இன்னும் பலப்பாக் கட்டி, யாழ்ப்பாணத்துக்குக் காலடி வைக்கிற ஆக்களின்ர கண்ணில அதுதெரிஞ்சால், செம்மணி நினைவோடதான் அவை உள்ளுக்க வருவினம். இப்பிடியொரு அநியாயம் தமிழ்மக்களுக்கு நடந்த மண்ணில காலடி வைக்கிறம் எண்டதை எப்பவும் அந்தத் தூபி சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கும். ஆனால் அணையாவிளக்குப் போராட்டம் நடந்த கொஞ்சநாளிலேயே, சிலர் அந்த இடத்தில பழைய கட்டட இடிபாடுகளைக் கொண்டந்து கொட்டி, நிரவத் தொடங்கிட்டினம். என்னெண்டு கேட்டால், அங்க இருக்கிற சிவலிங்கத்துக்கு மண்டபம் கட்டப்போயினமாம். அதுவும் நல்லவேலைதான். இல்லாட்டி சிலவேளை அதில விகாரையொண்டு முளைச்சிருக்கும். அப்பிடி விகாரை வராமல் சிவலிங்கம் வந்தது நல்லதுதான். ஆனால் செம்மணி அகழ்வெல்லாம் முடிஞ்ச பிறகு சிவலிங்கத்துக்கு மண்டபம் கட்டிறவேலையளைப் பாக்கலாம் தானே. இப்ப அந்த இடத்தில கிடந்த பழைய இடிபாட்டுக் கல்லுகளை எடுத்து முந்தநாளோ, அதுக்கு முதல்நாளோ ஆரோ சில தறுதலையள் அந்த அணையாவிளக்குத் தூபியை உடைச்சுப்போட்டுதுகள். தெரியாமல் உடைச்சினமோ இல்லாட்டி தெரிஞ்சுதான் உடைச்சாங்களோ எண்டது ஒருத்தருக்கும் தெரியேலை. ஆனால் எங்கட வரலாறை நாங்களேதான் மண்ணைள்ளி மூடிப்புதைக்கிறம் எண்டதுக்கு இந்த அணையாவிளக்குத் தூபி உடைச்சதும் ஒரு சாட்சிதான் கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்கவும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடிமுடியும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சகோதரவகையில் வீண் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இழுபறியாக இருந்த முக்கியமான காரியம் ஒன்று அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். உறவுகளால் நன்மை உண்டாகும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளையசகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது. வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொண்டாலும் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**தனுசு:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே இருக்கும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல் நலனில் கவனம்தேவை. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள்வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சிதரும்.

# போரிற் பெண்கள்



திறன்மகளிர் பெயர் திகழ ஒருதினம்
அவர் சேவை அறிவதெனில் பலயுகம்
பாரினில் போர்வரின் பெண்களை பாதிக்கும்
பண்டைய வரலாற்றிலும் விதியென வாதிப்பர்
சுமைகளை சுமக்கும் ஆணிவேர் ஆனவர்
சிந்தனை செயல்களில் இயந்திரம் ஆயினர்
வீட்டினிலிருந்து எழுந்த புரட்சியின் குரல்கள்
சமுதாய மாற்றத்தை வரைந்த எழுதுகோல்கள்
போர் உலகின் வன்கொடுமைப் போக்கு
மகளிர் மீதான பாலியல் தாக்கம்

ஜப்பான் கொரிய பெண்வதைகள் லட்சம்
ஞாபகச் சிலையுடன் சுகமளிபெண்கள் பட்டம்
இந்திய ரஷ்ய புரட்சிப் பெண்களை விஞ்சிய
ஈழப் பெண்களுக்கு வியத்தகு விருதுகள்
காலமளித்த கட்டாயப் போரில் மகளிர்
இருளிலும் சென்று இலக்குகள் பொடித்தனர்
வெள்ளைக் குப்பிகள் வீரம் பேசின
மஞ்சள்நூல் தாலிகள் மதிப்பு மிளிர்ந்தன
போரோடு வேரோடும் காதல் இனிது
வறுமையுடன் கைகோர்க்கும் போர் கொடிது

காலச்சுற்றில் சூழ்ச்சி சேனையை முடக்கியது
அந்தரித்த மக்கள் அவலமாய் மாண்டனர்
உயிர்காப்பு அகழிகள் தகர்ந்து அழிந்தன
உயிர் கழன்ற உடல்கள் துடிப்படங்கின
வஞ்சகமாய் மாறியது யுத்தத்தின் வெற்றி
மௌனித்தது மூன்று தசாப்த உரிமைப்போர்
உலகில் உறுதிக்கு பேரான பெண்கள்
மனங்களில் காயங்கள் ஆற்றாத நிலை
உறவுகள் எங்கோ கலைந்து பிரிந்தன
ஊமை ரணங்கள் உள்ளிருந்து வலித்தன

சமரில் நீறுபுத்த வருண சாத்திரங்கள்
வானளாவ எரிந்து நின்று பேசுகின்றன
பிடிமானங்கள் தொலைத்த போர்மகளிர் பலர்
சமூகம் கண்டுகொள்ளா நிலைக்கு தள்ளப்பட்டனர்
போரால் ஈரம்பதினாயிரம் பெண் தலைமைத்துவம்
வலுவுடன் போராடியவர் வாழ்வாதாரம் தேடுகின்றனர்
காணாமல் போனோரை தேடும் பெண்கள்
மனிதப்புதைகுழிகளுக்கு அருகிலும் மன்றாடுகின்றனர்
மண்ணை நேசித்த மனங்களின் குமுறல்
வாழ்நாள் பரிசாய் வழங்கப்பட்டதா?

- பூரணி

*உலகின் அதிக ஊதியம் பெறும் வேலைத் துறைகளில் நுழைவதற்கு*
*உங்களுக்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பு!*

**இலங்கையின் பாரிய அரசு மர தொழில்நுட்ப பயிற்சி நிறுவன**
**2025 - 2026 கல்வியாண்டிற்கான**

## இயந்திர மர தொழில்நுட்ப பாடத்திட்டம்
## (Mechanical Wood Technology Course)
## NVQ - 3, 4 இற்கான
## பயிற்சியாளர்களை சேர்த்தல்

- பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.
- சிறப்பான பயிற்சியுடன் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற NVQ நிலை 4 சான்றிதழ்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இருபாலாருக்கும் உகந்தது.
- இலவச விடுதி வசதிகள்.
- இலங்கையின் பிரபலமான நிறுவனங்களில் தொழிற்பயிற்சி.

**பாடத்திட்டத்தை முடித்த அனைவருக்கும் உயர்ந்த சம்பளத்துடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிலையான வேலை வாய்ப்புகள்**

**விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி:**
**30 அக்டோபர் 2025**

கால அளவு : 1 வருடம்
வயது வரம்பு : 18- 40 வயது வரை (ஆண்/பெண்)

பயிற்சி தங்குமிடம் NVQ-4 இலவசம்

மேலதிக தகவல் மற்றும் விண்ணப்பங்களுக்கு:

071 285 3851 - ஆர்.ஜீ. ஆரியரத்ன (தள அலுவலர்)
இயந்திர மர தொழில்நுட்ப மேம்பாட்டு பயிற்சி நிறுவனம்
Advanced Training Institute of Mechanical Carpentry (ATIMC)
இல. 282, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை.
தொ.பேசி: 0112 177336 / 0112 787604 FB: National Crafts Council வெப்: www.craftscouncil.gov.lk

NCC
**தேசிய அருங்கலைகள் பேரவை**
கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு
ரோஹின மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல.
தொலைபேசி: 011 278 4165, 011 278 7604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



**நாளொரு நல்வார்த்தை**

அவநம்பிக்கை புகார் செய்கின்றது;
நம்பிக்கை மாற்றத்தை எதிர்பார்க்கின்றது;
யதார்த்தம் சிக்கலை சரி செய்கின்றது.

–வில்லியம் ஆர்தர் வார்ட்–


# ஓயாத தாண்டல்களும் ஒழியாத கைதுகளும்

எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காக தமிழக மீனவர்கள் 47 பேரை இலங்கைக் கடற்படையினர் ஒரு நாளில் கைதுசெய்திருக்கின்றார்கள். வடக்குக் கடலில் எல்லைதாண்டும் தமிழக மீனவர்கள் கைதுசய்யப்படுவது தவிர்க்கமுடியாதது என்ற நிலையில், இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தமிழக அரசாங்கத்துக்கும், அங்குள்ள அரசியல் தலைமைகளுக்கும் உள்ளது. இருந்தபோதும் அவை தங்களின் அரசியல்நலனுக்காக மீனவர்களின் வாழ்க்கையை அழிப்பதே வரலாறாக இருக்கின்றது. தமிழக மீனவர்களின் எல்லைதாண்டிய மீன்பிடியை முற்றாகத் தடுக்கவேண்டும் என்ற வடக்கு மீனவர்களின் கோரிக்கையில் நூற்றுக்குநூறு வீதம் நியாயமானதே. எல்லைதாண்டும் தமிழக இழுவைப் படகுகள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மூலமும், இழுவைமடி வலைகள் மூலமும் வடக்குக்கடலில் மீன்வளத்தை மனச்சாட்சியின்றி அழித்துச் செல்கின்றன. அதுமட்டுமல்லாது போரின் கோரப் பிடியில் சிக்கி நலிந்துபோயிருக்கும் வடக்கு மீனவர்களின் வலைகளையும், உபகரணங்களையும் தமிழக இழுவைப்படகுகள் சேதப்படுத்துகின்றன. வடக்கு மீனவர்கள் தமிழக இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கவேண்டும் என்று கோருவதை எவரும் குற்றஞ்சொல்லிவிட முடியாது. தங்களின் வாழ்வாதாரம் அச்சுறுத்தப்படுவதாக வடக்கு மீனவர்கள் கருதுவது நியாயமானதே.

இந்தப் பிரச்சனையை இரு நாடுகளும் பேசித் தீர்க்கவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, எல்லைதாண்டும் தனது மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழகத்துக்கு இருக்கின்றது. ஆனால் இந்தப் பிரச்சினையை வாக்குச் சேகரிப்புப் பொறியாகப் பயன்படுத்தும் தமிழகத்தின் அரசியல்வாதிகள், எல்லைதாண்டிச் செல்லும் மீனவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களைத் தூண்டிவிடும்வகையிலேயே செயற்படுகின்றனர். மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைக் கண்டிக்கும் அவர்கள், கடல் எல்லையை மீறிச்செல்வது சட்டவிரோதம் என்பதைப் பொறுப்புடன் எடுத்துக்கூறத் தயங்குகின்றனர். மாறாக, கைதான மீனவர்களை 'வீரர்களாக' விம்பப்படுத்திக்குளிர்காயவே முயற்சிக்கின்றனர்.

இந்த அரசியல் விளையாட்டு, சாதாரண மீனவர்களுக்கு எந்த நன்மையும் பயக்காது. கைதுசெய்யப்படுவது, அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவது என்பவற்றால் பாதிக்கப்படப் போவது அப்பாவித் தமிழக மீனவர்களும் அவர்களுடைய குடும்பங்களுமே. அதனால் அரசியல் சித்துவிளையாட்டுகளை விடுத்து தமிழக அரசாங்கமும், அரசியல்வாதிகளும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும். கச்சதீவு விடயத்தையும், கைது விடயத்தையும் அரசியல் பரபரப்புக்காகப் பயன்படுத்தி மீனவர்களின் வாழ்க்கையோடு விளையாடாமல், மீனவர்கள் எல்லைதாண்டுவதைக் கட்டுப்படுத்த முயலவேண்டும். அதை விடுத்து எல்லைதாண்டும் மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைப் பெருங்குற்றமாக உருப்பெருப்பித்து, ஆவேசக்குரல் எழுப்புவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. கைதுகளும் நிறுத்தப்படப்போவதில்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# கல்வித்துறை சம்பளச்சிக்கலை நீக்குவதற்குத் தலையீடுகள்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.10

**கல்வித்துறையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக எதிர்காலத்தில் கட்டமைப்பு ரீதியான அவசியமான தலையீடுகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்விக் கட்டமைப்பில் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகள் உள்ள போதும் இலங்கையின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மேற்கொள்ளும் விசேட சேவை நாட்டுக்குப் பெருமையாகும். கல்விமுறையின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், ஒத்திசைவான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தவும், ஆசிரியர்களால் பிரதிநிதித்து வப்படுத்தும் மனித வளத்தை மேம்படுத்தவும் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல், பாடசாலைக் கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்தல், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்குத் தேவையான தொழிற்பயிற்சி நிகழ்வுகளை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றைச் செயற்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது - என்றார். (எ-இ)



# சா/த பரீட்சை மீள்பரிசீலனை முடிவுகள் வெளியீடு

கொழும்பு, ஒக்.10


2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையின் மீள்பரிசீலனை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மாணவர்கள் தங்களது முடிவுகளை www.doenets.lk அல்லது www.results.exams.gov.lk என்ற அதிகாரபூர்வ இணையதளங்கள் வழியாக, தமது பரீட்சை இலக்கத்தை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்வதன்மூலம் அறிந்து கொள்ளலாம் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)


# போதைப்பொருள்: ஆண், பெண் கைது

கொழும்பு, ஒக்.10

கடவத பஹல, பியன்விலப் பகுதியில் உள்ள ஒரு வீடொன்றிலிருந்து 12 கிலோ போதைப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டபோதே போதைப்பொருள்களுடன் 32 வயதுடைய பெண்ணும் 26 வயதுடைய ஆணும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-இ)





# நாட்டைச்சீரழித்தோரை சட்டத்தின் முன்நிறுத்துக

## ரிசாத் எம்.பி.தெரிவிப்பு

வவுனியா, ஒக்.10

நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளால் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாடு வங்குரோத்தடைந்தது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தூய விசாரணையின் பின் தண்டனை வழங்கப்படவேண்டும். சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வருவதன் ஊடாக மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. அந்தத் திருத்தம் செய்வதில் காலதாமதமாகுமாயின் பழைய முறையின் பிரகாரம் தேர்தலை நடத்துவது சாத்தியமானது என்பதை அரசுக்கு வலியுறுத்துகிறோம் - என்றார். (ச-25,110)

**நாளை**
சனிக்கிழமை - புரட்டாதி 25
11.10.2025
சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1949



மறைவு 09 . 10 . 2025

## சுப்ரமணியம் கனகராஜா
### ("Captain's Garden" - மருதானை)

காரைநகர் ஆலடி, களபூமி சத்திரந்தையை பிறப்பிடமாகவும், நல்லூர் மற்றும் அரியாலையை வதிவிடமாக்வும் கொண்ட சுப்ரமணியம் கனகராஜா அவர்கள் 09.10.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மருதானை தம்பையா) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகராஜா மனோன்மணிதேவியின் அன்புக் கணவரும், சிவகணேசனின் (கண்ணா) அன்புத் தந்தையும், ஷாருக்காவின் அன்பு மாமனாரும், யாழன், யாத்ரனின் அன்பு பேரனும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் இராசம்மா, ஞானேஸ்வரி, விக்னேஸ்வரி, நகுலேஸ்வரி, தியாகேஸ்வரியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.10.2025 வெள்ளிக்கிழமை அரியாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 02.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினரகள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

57, ஆனந்தன் வடலி
3ம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
(அரியாலை பிரப்பங்குளம். மகாமாரி அம்மன் கோயில் அருகாமை)

தகவல்:
கனகராஜா சிவகணேசன்(மகன்)
+65 81968761 , +94 765399525

(CS 46459) E

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில் சந்தியில் இருந்து கிழக்கு பக்கமாக 500M தூரத்தில் 9 1/2 (9.5) பரப்பு காணி விற்பனைக்குண்டு
பரப்பு 52 லட்சம்

தொடர்பு: 077 986 6444

## ஹங்கேரியின் எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல்!

ஹங்கேரியின் புகழ்பெற்ற எழுத்தாளர் லாஸ்லோவுக்கு, இலக்கியத்திற்கான நோபல் பரிசில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### பகிரங்க வாகன ஏல விற்பனை

சமாசத்துக்கு சொந்தமான பின்வரும் வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனை முறை மூலம் விற்பனை செய்யப்பட உள்ளன.

| வாகனம் | வாகன இலக்கம் | வாகனத்தின் ஆகக்குறைந்த அடிப்படைக் கேள்வித் தொகை |
|---|---|---|
| பிக்கப் | NP.LA.6199 | 350000/= |
| லொறி கூளர் | NE.JK.0581 | 3600000/= |
| லொறி கூளர் | NP.JK.0583 | 4000000/= |

மேற்படி வாகனங்கள் தலைவர், தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அவர்களுடன் 077 977 3412, 077 831 2130 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.

**நிபந்தனைகள்**

1. ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்க முடியாத வைப்பு பணமாக ரூபாய் 1000/= நேரடியாக பொருளாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் குறித்த வாகனத்தின் விற்பனை செய்யப்படும் தொகையின் 10% அன்றைய தினம் செலுத்துவதுடன் மீதியினை 14 நாட்களுக்குள் செலுத்தி வாகனத்தினை அகற்றல் வேண்டும்.
3. மேற்படி வாகனத்திற்கான பகிரங்க ஏல விற்பனை 24.10.2025ம் திகதி காலை 11.00 சமாச அலுவலகத்தில் இடம்பெறும்.
4. வாகன ஏல விற்பனையில் வாகனத்திற்கான மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தினை செலுத்தியவர்கள் மாத்திரம் பங்குபற்ற முடியும்.
5. சமாச இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.


தலைவர்

க.செல்வகுமார்
செயலாளர்

(CS 59610) E

ஓம் விஸ்வப்ரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை சோதிலிங்கம் (பத்தர்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், கே.கே.எஸ் றோட், 19/2 தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சோதிலிங்கம் அவர்கள் கடந்த (08.10.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தேவிகாராணியின் அன்புக் கணவரும், சத்தியசீலன், காலஞ்சென்ற தியாகசீலன் (நித்திலன்/ இசைக்கோன்) மற்றும் றஜிதா, கஜேந்திரன், இராஜகாந்தன், தேவமனோகரி ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, சொர்ணலிங்கம், பரமேஸ்வரி, அரியமலர் மற்றும் இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், சிவசங்கர், சரண்யா, கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும், பிரியதர்சனா, லதுசனா, சந்தோஷ், நிரோஜன், கர்னிஸ், கிருத்திக் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

19/2, தட்டாதெரு,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
மகள் - றஜிதா - 076 033 9971
மகன் - காந்தன் - 077 584 6544

(CS/59613) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்திலுள்ள உணவகங்கள் சோதனை

மன்னார்,ஒக்.10

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக சுகாதார விதிமுறைகளை பின்பற்றாது பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வரும் உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் தொடர்ச்சியாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மற்றும் மன்னார் நகரசபை சுகாதாரக் குழுவினர் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மூர் வீதியில் மதஸ்தலத்துக்குள் இயங்கும் உணவகம் நேற்று சோதனைக்குட்படுத்தப்பட்டபோது உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, அசுத்தமான முறையில் உணவுகள் தயாரிக்கப்பட்டமை போன்ற பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த உணவகம் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(க-56)


## மணிவிழா அழைப்பு




Best Wishes

திரு. சுப்பிரமணியம் சண்முகவடிவேல்

(கிராம அலுவலர், தரம் - I)

காலம் : 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : பி.ப 3.00 மணிக்கு

இடம் : பொன் செல்வமஹால் மண்டபம் இராஜ வீதி, நீர்வேலி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்க.)

சண் மணிவிழாச் சபை

நீர்வேலி

(CS/30557) J-1

நேரலை: yarl wedding youtube chanel (இலங்கை நேரப்படி 3.00 pm)


## நகராட்சி மன்றம், சாவகச்சேரி
## குத்தகை கேள்வி அறிவித்தல் - 2026

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ் குறிப்பிடப்படுகின்ற பொதுச்சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக) கருவாட்டுக்கடை, மற்றும் இறைச்சிக் கடைகள், பொதுமலசலகூடம், பேருந்து தரிப்பிடத்தில் விளம்பரப்பலகைகள் காட்சிப்படுத்தல் என்பனவற்றுக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 திகதி தொடக்கம் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன

01. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2025.10.10 ஆம் திகதி தொடக்கம் 2025.10.27 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 – பி.ப 2.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
    கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 28.10.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 28.10.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு தனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 28.10.2025 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2026 ஆம் ஆண்டு பொதுச்சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) கருவாட்டுக்கடை, இறைச்சிக்கடைகள், பொதுமலசலகூடம், பேருந்து தரிப்பிடத்தில் விளம்பரப்பலகை காட்சிப்படுத்துதல் என்பவற்றுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.01.2026– 31.12.2026) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர வரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) | 18,546,990.00 | 185,500.00 | 2,000.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல:01 | 162,800..00 | 1,700.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல:01 | 501,600.00 | 5,100.00 | 2,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல:01 | 1,729,200.00 | 17,300.00 | 2,000.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை இல: 02 | 1,729,200.00 | 17,300.00 | 2,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை இல:01 | 1,991,000.00 | 20,000.00 | 2,000.00 |
| 07 | கோழி இறைச்சிக் கடை இல:02 | 1,991,000.00 | 20,000.00 | 2,000.00 |
| 08 | பேருந்து நிலைய வீதி பொது மலசலகூடம் | 26,350.00 | 500.00 | 2,000.00 |
| 09 | பேருந்து தரிப்பிட விளம்பரப் பலகை 15x 4 | 26,950.00 | 500.00 | 2,000.00 |

- குறிப்பு : இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

தவிசாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி
2025.10.10

# இளம் தாய் உயிரிழப்பு; விசாரணைகள் ஆரம்பம்

## முல்லைத்தீவு மருத்துவமனை தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஒக்.10

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியைச் சேர்ந்த இளம் தாயொருவர் உயிரிழந்தமை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நிர்வாகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் நளின் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் அசமந்தப்போக்காலேயே உயிரிழப்பு நிகழ்ந்ததாக உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளநிலையில் அதற்குப் பதிலளிக்கும்வகையில், மருத்துவமனை நிர்வாகம் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் ஊடக சந்திப்பை நடத்தி இதனைத் தெரிவித்தனர். வற்றாப்பளையைச் சேர்ந்த இளம்தாயொருவர் அண்மையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். அவரின் இறப்புக்கு குறித்து மருத்துவ அறிக்கையில், நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டுவர காலதாமதமே காரணமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணை முடிவில் தவறுகள் இழைக்கப்பட்டிருப்பின் தகுந்த சட்ட நடடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

(ச-க-19)

# மீனவர்களுக்கு ஓய்வூதியம் மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார்,ஒக்.10

மீனவர்களுக்கு நீண்டகாலம் நிறுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம்

புதன்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் ஓய்வூதியத்திட்டத்தில் உள்ள நன்மைகள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கான வயதெல்லை மற்றும் அடிப்படைத்தகுதிகள் தொடர்பில் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசச் செயலாளர் என்.எம் முஹமட் ஆலமின் ஒருங்கிணைப்பில், சமாசத்தின் தலைவர் மரியதாஸ் குரூஸ் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மாவட்டக் கமத்தொழில் காப்புறுதித் திட்டப்பணிப் பாளர், மாவட்டக் கடற்றொழில் உதவிப் பணிப்பாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், மீனவர்கள் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-213)

## விண்ணப்பங்கோரல்

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறை தொடர்பான பயிற்சி நெறியைத் தொடர ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும். அஸ்வெசும பயனாளியாகவுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 18–45 வயதுக்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். மூன்று மாதங்களுடைய இந்தப் பயிற்சித்திட்டத்தில் இணைவதன்மூலம் NVQ level III சான்றிதழைப் பெற்றுக் கொள்வதுடன் உடனடியான வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ளமுடியும். ஆர்வமுடையவர்கள் தத்தமது பிரிவு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் விபரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-9)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
077 334 1281


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01 நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.

02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.

03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் SBD -03 இல் தரவு அட்டவணை (Schedule) இலும் SBD – 01 இல் Bidding Data இலும் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் '**தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2025.10.10 ஆம் திகதியிலிருந்து 2025.10.23 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும்** மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 01 - 10 வரையான தொடரிலக்கமுடைய வேலைகளிற்கு ரூபா. 3,000.00 உம் இலக்கம் 11 தொடரிலக்கமுடைய வேலைக்கு ரூபா. 6,000.00 உம் (வரி நீங்கலாக) பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2025.10.24ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியில் செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2025.10.17 ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதரார்கள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2025.10.10 - 2025.10.23** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2025.10.17** |
| **Closing and Opening of Bid** | **At 10.00A.M on 2025.10.24** |

| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NPS/2025/CF-III/Pac/01 | Renovation of Roads Package – 01 (Gnanaveera 1st Lane, Vivekananda Road, Upumadam Pillayar Kovil Veethy) | 3.26 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 48,900.00 | 2026.01.23 |
| 2 | NPS/2025/CF-III/Pac/02 | Renovation of Roads Package – 02 (Sebastiyar Veethy, Kulamkarai by Lane) | 3.97 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 59,550.00 | 2026.01.23 |
| 3 | NPS/2025/CF-III/Pac/03 | Renovation of Roads Package – 03 (Varagi Amman Community Centre Road, Inkaran Veethy, Champian Lane by Lane, Old Post Office by Lane) | 2.49 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 37,350.00 | 2026.01.23 |
| 4 | NPS/2025/CF-III/Pac/04 | Renovation of Roads Package – 04 (Sabapathy Veethy by Lanes, Nethage Community Centre Front Lane) | 4.46 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 66,900.00 | 2026.01.23 |
| 5 | NPS/2025/CF-III/Pac/05 | Renovation of Roads Package – 05 (New Chemmany Road Left side 1st Lane, New Chemmany Road Right side 1st Lane, Murgan Veethy by Lane, Ramakrishna Veethy by Lane, Poncity Veethy Balance Work, Kaddaiyalady Veethy by Lane) | 4.67 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 70,050.00 | 2026.01.23 |
| 6 | NPS/2025/CF-III/Pac/06 | Renovation of Macadam Roads Package – 06 (Ariyalai East by Lane-Near School, Amman Veethy by Lane) | 3.11 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 46,650.00 | 2026.01.23 |
| 7 | NPS/2025/CF-III/Pac/07 | Renovation of Roads Package – 07 (Muthaliyar Thoddam by Lane 1, Muthaliyar Thoddam by Lane 2) | 3.00 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 45,000.00 | 2026.01.23 |
| 8 | NPS/2025/CF-III/Pac/08 | Maintanance of Roads Package – 08 (Re – Tarring Work) (Thilayampathy Veethy , CCTMS Veethy, Arasady Veethy & By Lanes, CEKO Lane, KKS by Lane-Post Office Front, Chandrasegara Pillaiyar Road, Kodukinaru Veethy, Nanthavil Lane) | 3.17 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 47,550.00 | 2026.01.23 |
| 9 | NPS/2025/CF-III/Pac/09 | Construction of Concrete Path Package – 09 (Barathy 3rd Path, Barathy 6th Path, Vivekananda By Path, Manchavanapathy By Path, Varaki Amman By Path, Adaikkalanayaky Lane By Path) | 4.72 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 70,800.00 | 2026.01.23 |
| 10 | NPS/2025/CF-III/Pac/10 | Construction of KKS Road 2nd Cross Lane Culvert at Kondavil Package – 10 | 1.73 | 77 Days | C8 & above (Road) | 63 Days | 25,950.00 | 2026.01.23 |
| 11 | NPS/2025/CF-III/Nav.Ro./11 | Renovation of Navalady Uthayapuram Joint Road Ward 12 | 11.67 | 77 Days | C7 & above (Road) | 77 Days | 175,050.00 | 2026.02.06 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.**
2025.10.10
(CR/4656) J-1

# மனதைப் பாதுகாத்து மாண்புற வாழ்வோம்!

**சர்வதேச உளவளதினம் இன்றாகும். இதை முன்னிட்டு, இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

உளம் பெருங்கோயில் என்றார் திருமூலர். இன்று மனம், உளம் பற்றிய கல்வியும் ஆராய்ச்சியும் வளர்ச்சிகண்டுவருகின்றன. மனிதன் மனத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கின்றான் என்பது இதன் அர்த்தம். இந்த முன்னேற்றம் நடந்திருப்பதை ஒரு சிலர் மாத்திரமே அறிந்து நல்லபடி வாழ்கின்றனர். பலருக்கு இவ்விடயங்கள் தொடர்பான அறிவு இருந்தாலும் சமூகநாணம் என்ற வலைக்குள் சிக்குண்டு வெளிவரமுடியாமல் இருக்கின்றனர். உடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப்போல உள்ளத்துக்கும் முக்கியத்துவம் தருவதற்குத் தயங்குகின்றனர். உடலுக்கு ஒரு பிரச்சினை என்றால் அதற்குரிய மாற்றத்தை அறிந்து செயற்படுத்துவதில் காட்டும் வேகத்தை தனது உள்ளத்தைப் பிரச்சினையில் இருந்து விடுவிப்பதற்கும் செம்மைப்படுத்துவதற்கும் பயன்படுத்துவதில்லை. உடம்பில் ஒரு நோய் வந்தால் மனம் பல எதிரான எண்ணங்களை உருவாக்கித் தானும் துவண்டு விடுகிறது. அதுபோல மனதில் ஒருகவலையோதுன்பமோ குடிகொண்டு விட்டால் அது உடம்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த இருவகையான நிலைக்கு உட்பட்டு துன்புறுவது எமது நாளாந்த வாழ்க்கையின் அனுபவமாக இருக்கிறது.



எமது இன்றைய வாழ்க்கைமுறையில் நாம் பயன்படுத்தும் உணவு தொடங்கி கையில் இருக்கும் தொலைபேசி வரை உடலையும் மனத்தையும் பாதிக்கின்றவையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. எமது வாழ்க்கையோ இயந்திரத்தனம் பொருந்தியதாக வேகமாக நகர்கின்றது. வேலைப்பளுவால் ஓய்வில்லாமல் பலர் தவித்துக் கிடக்கின்றனர். இது எமது நீண்ட வாழ்க்கைக்குச் சவாலாக இருப்பதை நாம் உணர மறுக்கின்றோம். இத்தகைய வாழ்க்கை முறையால் மனதில் ஏற்படும் பல நெருக்கடிகளால் எமது சிந்தனைகள் எதிரான சிந்தனைகளாக மாற்றப்படுவதற்குரிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்தச் சிந்தனை மாற்றத்தால் எமது மனம் அழுத்தத்தைச் சந்திக்கின்றது. இது எமது உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனதில் ஏற்படும் அழுத்தத்தால் உடலில் ஏற்படும் நோய் நிலைமையை உளவியலாளர்கள் 'மெய்ப்பாட்டு' நோய்கள் எனக் கூறுவர். எம்மிடம் உளவளத்துணைக்கு வருபவர்களில் பலர் இவ்வகையான முறைப்பாடுகளையே கொண்டுள்ளனர்.

உடலில் உண்மையாகவே நோய் ஏற்பட்டிருப்பினும் அந்த நோயைக் குணமாக்கும் தன்மை மனத்திலும் தங்கியுள்ளது. தீர்க்கமுடியாத நோய்கள் எனக் கருதப்படும் நோய்களுக்கு உட்பட்டிருப்பவர்கள்கூடத் தமது வாழ்நாள் வரையறுக்கப்பட்டநிலையிலும் தமது மனதை எவ்வாறு செம்மைப்படுத்தி அழுத்தமில்லாமல் வைத்திருக்கிறார்கள என்பதைப் பொறுத்து அவர்களின் வாழ்நாள் நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை நாம் பல உதாரணங்கள்மூலம் கண்டிருக்கின்றோம்; அறிந்திருக்கின்றோம்.

அண்மையில் மார்பகப் புற்றுநோய் வந்தவர்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில், அவர்களில் பலரின் எண்ணவோட்டங்கள் நீண்டகாலமாக எதிர்மறை நிலையில் இருந்தமை வெளிப்பட்டது. இந்த ஆய்வு தொடர்பில் வெவ்வேறுபட்ட கருத்துகள் இருந்தாலும், அது கூறவிளையும் கருத்தியலைப் புரிந்துகொள்வது அவசியம்.

### உள்ளம் செம்மைப்பட

உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் ஒரு கருவியாக ஆன்மிகம் இருக்கின்றது. இதனைவிடப் பிரச்சினைகள்வரும் போது நம்பிக்கைக்கு உரியவரோடு மனந்திறந்து பகிர்ந்து கொள்ளுதல், நல்ல இசையைக் கேட்டல், இனிய புத்தகங்களை வாசித்தல், விளையாடுதல், நாடகம், நடனம் போன்ற கலைகளை இரசித்தல், அத்தகைய கலைகளில் ஈடுபடுதல், நல்லவர்களுடனான சேர்க்கை, நகைச்சுவையை இரசித்து மனம்விட்டுச் சிரித்தல் போன்றனவும் எமது உள்ளத்தைச் செம்மையாக்கும் கருவிகளாகத் தொழிற்படவல்லன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் உள்ளத்தைச் செம்மையாக்கினால் எமது வாழ்வு புதிய பாதையில் பயணிக்கும். இதற்கு சிலருக்கு நேரத்தைக் கண்டுபிடிப்பது சிக்கலானதாக இருக்கலாம். அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். வாழ்க்கையில் நாம் எப்போதும் நாண் ஏற்றிய வில்லுப்போல இருந்தால் அது பிரச்சினையாகிவிடும். வில்லைத் தேவைப்படும்போது மட்டுமே நாண் ஏற்றிப் பின்னர் அதனைத் தளர்த்தி வைக்கவேண்டும். எமது மனத்துக்கும் இந்த நடைமுறை நன்கு பொருந்தும். மனம் தெளிவாக நலமாக இருந்தால் உடலுக்குவரும் பிரச்சினைகள் குறையும். எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு எமது வாழ்க்கையை நன்னிலைப்படுத்த முயல்வோம்.

**உளவளத்துணை நிலையம்**
**சாந்திகம்**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம் 115/1, இந்துக்கல்லூரி வீதி, வட்டாரம் - 11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11. இந்துக்கல்லூரி வீதியிலுள்ள இல 115/1 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **முத்துக்குமாரு அம்பலவாணர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **ஆறுமுகம் திருநாவுக்கரசு** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ.சிவஞானம் முகதாவில் 3457/01.02.1994ஆம் இலக்க உறுதியால் **அம்பலவாணர் பொன்னம்பலம்** ஆகியவரிடமிருந்து அவரது சீவிய உரித்திற்கமைவாக நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **அம்பலவாணர் பொன்னம்பலம்** ஆகியவர் குறித்த ஆதனத்தை குறித்த 3457/01.02.1994ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசுவுக்கு நன்கொடை அளித்திருந்தார் எனவும். குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு ஆகியவர் 04 ஆண்டுகளுக்கு முன்னர் ரூபா 50.000/- பணத்தினை தனக்கு கைமாறாக தந்துதவியமையாலும். மேலும் பல சரீர உதவிகளைச் செய்தமையாலும். குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு மீது தான் கொண்டுள்ள கொண்டுள்ள அன்பின் மேலீட்டினால் குறித்த நன்கொடையை எவ்வித காரணம் கொண்டும் அழிக்க மாட்டார் எனவும். குறித்த ஆதனமானது குறித்த ஆறுமுகம் திருநாவுக்கரசு ஆகியவரின் சீவிய காலத்தின் பின் அவரது மனைவி அன்னபூரணத்தின் சீவிய உரித்திற்கமைவாக அவரது மகன் திருநாவுக்கரசு ஜெயபாலனுக்கு நிந்தமாக சேர வேண்டுமெனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் 16947/24.08.1994ஆம் இலக்கத்தில் அழியா நன்கொடையாகத் திருத்தல உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்.

**நிகேஷ் பெண் நிருபா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் 539/26.10.2021ஆம் இலக்க உறுதியால் **திருநாவுக்கரசு ஜெயபாலனும். ஜெயபாலன் பெண் கமலாம்பிகையும். ஆறுமுகம் திருநாவுக்கரசுவும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப்ட பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"கவடியொல்லை"**
இறை: **சங்கானை மேற்கு**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 6 குளி 14.55**
எல்லைகள்: **கிழக்கு**-செல்லையா கைம்பெண் பாக்கியத்துக்கும். சண்முகநாதன் பெண் கமலாதேவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். **வடக்கு**-இக்காணிக்கு போக்குவரவு செய்யவென விடப்பட்ட 8முழ அகலமான ஒழுங்கையும். ஒழுங்கை முகப்பும். நடராசா கைம்பெண் சிவமணிநாயகத்தின் ஆதனமும். **மேற்கு**-அம்பலவாணர் பொன்னம்பலத்தினதும். அம்பலவாணர் மகாயோகதேவியின் ஆதனமும். **தெற்கு**-தில்லையம்பலம் கனகசபையின் ஆதனம்

குறித்த **நிகேஷ் பெண் நிருபா** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குறித்த **நிகேஷ் பெண் நிருபா** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர் / செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(CS 30586) E

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## பெறுகை அறிவித்தல்

**2025ம் ஆண்டுக்கான தெரு விளக்குகளை பழுதுபார்த்தல்/ புதிதாக பொருத்துதல் தொடர்பான சேவைகளுக்கு விலை மனுக் கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் கரைதுறைப்பற்று பிரதேசசபையில் 2025 ஆம் ஆண்டிற்கான தெரு விளக்குகளை (Street Light) பழுதுபார்த்தல் மற்றும் புதிதாகப் பொருத்துதல் சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.


1) விண்ணப்பிக்கும் வழங்குநர் இரு ஆண்டுகளுக்கு குறையாத மேற்குறித்த சேவையை இலங்கை மின்சார சபைக்கு வழங்கிய ஒப்பந்தகாரராக கட்டாயமாக இருத்தல் வேண்டும்.
2) குறித்த சேவையை வழங்குவதற்குரிய தகைமையுள்ள தேவையான ஆளணி, உபகரண வசதிகள் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் யாவற்றையும் குறித்த வழங்குநர் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.
3) குறித்த வழங்குநர் வட மாகாண ஆளுகைக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4) சேவை வழங்குநர்கள் பெறுகை விண்ணப்பங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் 10.10.2025 தொடக்கம் 23.10.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3.500.00 ஐ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5) பெறுகை ஆவணங்கள் 24.10.2025 ம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப் பற்று பிரதேச சபை, முல்லைத்தீவு"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் / கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாகத் திறக்கப் படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

சி.லோகேஸ்வரன்
தலைவர்,
பெறுகைக்குழு,
கரைதுறைப்பற்று பிரதேச சபை,
முல்லைத்தீவு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 15 . 06 . 1942

விண்ணில் 10 . 09 . 2025

அமரர்

**திருமதி சுப்பிரமணியம் கமலாதேவி**

(பெரியபிள்ளை)

அன்பு மொழிபேசி
அறிவுரைகள் பல கூறி
ஆசையாய் எமை அரவணைத்து
இன்புற்றுவாழ வழிகாட்டி
இன்று எமைவிட்டுப் பிரிந்து
மாதம் ஒன்று ஆனதம்மா - இறைவன்
பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம் - உம்
நித்திய ஆத்ம சாந்திக்காக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சரவணை கிழக்கு, வேலணை.
077 10 73 637

குடும்பத்தினர்.

(CR 00000) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 08 . 1938



மறைவு 09 . 10 . 2025

**Dr.நாகமுத்து சின்னத்தம்பி (RMO)**

(ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி நாகமுத்து சின்னத்தம்பி அவர்கள் நேற்று (09.10.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சேனாதிராசா - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மீனாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லதம்பி, காலஞ்சென்ற வல்லிபுரம், காலஞ்சென்ற இராசம்மா, காமாட்சி, சுந்தரம், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற சின்னம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற தங்கம், பூமகள், லெட்சுமி, நாகம்மா, சொர்ணம்மா, ஜானகி, காலஞ்சென்ற இராமநாதன், காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், யசோதரா, வாசுகி, சுமதி (அமெரிக்கா), சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமார், இளங்குமரன், முளுக்கன் (அமெரிக்கா), நவநீதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவின், பிரணவி, சோபியா, நாதவர்ஷன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2025) வெள்ளிக்கிழமை ந.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி மயானம் மட்டுவிலுக்கு கொண்டுச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
K.K.S. வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
077 959 0592, 077 967 2735

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 3822) A

# ஒக்ரோபர் 18ஆம் திகதிமுதல் வடக்கு - கிழக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஒக். 10

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வடகீழ்ப் பருவக் காற்றின் முதற் சுற்று மழை எதிர் வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை தாழமுக்கத்துடன் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

18ஆம் திகதி ஆரம்பிக்கும் முதற் சுற்று மழை 30ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

(ம-66)

## INVITATION FOR BID 2025/13
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Stamp Duty.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-10-10 To 2025-10-27 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T. P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.

   Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-10-10 To 2025-10-27 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-10-17 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02.00 P.M on 2025-10-28 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| SD/NP/JAF/VEPS/2025/01 | Construction of shopping complex at puttur public Market | 7.88 | 105 | C8 or above (Building) | 3,500.00 | 79,000.00 | 10.02.2026 | 77 |
| SD/NP/JAF/VEPS/2025/02 | Reconstruction of Pokkanai Road at urelu. | 6.94 | 63 | C8 or above (Highway) | 3,500.00 | 70,000.00 | 10.02.2026 | 77 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur .
10/10/2025

# புலோலியில் விபத்து; இருவருக்குப் படுகாயம்



யாழ்ப்பாணம், ஒக். 10

புலோலி சாரையடிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஆட்டோ மோட்டார் சைக்கிள் என்பன விபத்துக்கு உள்ளானதில் இருவர் படுகாயமடைந்தனர்.

விபத்துத் தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-100)

# தங்கம் விலையுயர்வு

கொழும்பு,ஒக்.10

தங்க விற்பனைத் தரவுகளின் படி, நேற்று 22 கரட் தங்கத்தின் ஒரு பவுண் 313,950 ரூபாவாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராம் 39.250 ரூபா வாகவும் 24 கரட் தங்கத்தின் ஒரு பவுண் ரூ.342,500 ஆகவும், 24 கரட் தங்கத்தின் ஒரு கிராம் ரூ.42,810 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது . (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாணய நிதியத்துடனான

# ஐந்தாம் கட்டக் கடனை வழங்க பணியாளர்கள் மட்ட உடன்பாடு!

கொழும்பு, ஒக். 10

சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் கடனுதவியின், ஐந்தாம் கட்டக் கொடுப்பனவுக்கான பணியாளர்கள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், இலங்கைக்கு ஐந்தாம் கட்டக் கடனாக 347 மில்லியன் டொலரை நாணய நிதியம் வழங்கவுள்ளது. எனினும், இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கு முன்னர் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடுகளை இலங்கை எட்ட வேண்டும் என்ற நிலையே காணப்படுகின்றது.

ஊழியர்கள் மட்ட இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை அண்மைக்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது இந்த நிலையிலேயே, அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிபெற்றுள்ளது என்றும், ஊழியர்களின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்றும் நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இதையடுத்து, இலங்கை அரசாங்கத்துக்கும், நாணய நிதியத்துக்கும் இடையில் விரைவில் அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் என்று கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அடுத்த...

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது, 'மாகாணசபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் வலியுறுத்தினார். இதன்போதே, அடுத்த வருடம் மாகாணத் தேர்தலை நடத்துவது உறுதி என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய விவகாரத்தை கையாளும் பொறுப்பு நாடாளுமன்றத்துக்கே உள்ளது. அந்தப் பணிகள் நிறைவடைந்ததும் தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கப்படும். இது தொடர்பில் அரசியற் கட்சிகளுடன் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளார். (அ-ம-44)

## ஜனாதிபதியுடன்...

ஆயருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது, ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய, மன்னாரில் காற்றாலை அமைக்கப்படுவதற்கு ஆயர் அனுமதி வழங்கியுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்திருந்தன. இவ்வாறான நிலையிலேயே, அந்தத் தகவல்களை ஆயர் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியுடனான எனது சந்திப்பில், காற்றாலைகள் தொடர்பான எமது பிரச்சினைகளை அவரிடம் தீர்க்கமான முன்வைத்தேன். ஏன் நாங்கள் காற்றாலைகளை எதிர்க்கின்றோம், எமது மக்களின் கோரிக்கை என்னவாக இருக்கின்றன என்று தெளிவுபடுத்தினேன்.

ஆனால், தற்போது அமைக்கத் திட்டமிட்டுள்ள 14 காற்றாலைகளையும் அமைப்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. இந்தப் 14 காற்றாலைகளையும் அனுமதித்தால், எதிர்காலத்தில் எந்தவொரு காற்றாலையும் மன்னாருக்குள் வராது என்றும், கனிய மணல் அகழ்வு இடம்பெறாது என்றும் ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார். அமைச்சரவை ஊடாக இதற்கு உத்தரவாதம் வழங்க முடியும் என்றும் அவர் கூறினார். ஆனால், எமது நிலைப்பாட்டை இன்னமும் ஜனாதிபதியிடம் தெரிவிக்கவில்லை.

நான் அங்கு எந்தவித ஒப்பந்தங்களையும் செய்யவில்லை. எங்களுடைய மக்களின் குரலைப் பிரதிபலிக்கவே சென்றேன். அதையே செய்தேன். 'மக்களுடன் கலந்துரையாடிவிட்டு எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்' என்ற தகவல் மட்டுமே ஜனாதிபதிக்கு எம்மால் கூறப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் நாங்கள் மக்களுடனும், சர்வ மதத் தலைவர்களுடனும், போராட்டத்தில் ஈடுபட்டோருடனும் கலந்துரையாடல் நடத்த வேண்டியுள்ளது. அதன் பின்னரேயே நாம் ஒரு தீர்மானத்துக்கு வருவோம் – என்றார். (அ-ம-56)

## குப்பை...

நிலையமொன்று அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதி மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாகவே, நேற்றையதினம் குப்பைகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை இடைமறித்து மக்கள் குழப்பத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும், சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வாகனங்களை இடைமறித்துக் குழப்பத்தில் ஈடுபட்ட எட்டுப் பேரைக் கைது செய்தனர். பின்னர், அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ-ம-20-26)

## 47 இந்திய...

என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 47 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார், நெடுந்தீவு ஆகிய கடற்பிராந்தியங்களில் வைத்தே இந்தக் கைதுநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் பயணித்த ஐந்து படகுகள், அவற்றில் இருந்த மீன்பிடி உபகரணங்கள் மற்றும் இழுவைமடி மூலம் பிடிக்கப்பட்ட தொன் கணக்கான மீன்கள் என்பனவும் இலங்கைக் கடற்படையால் கைப்பற்றப்பட்டன.

மீனவர்கள் உரிய சான்றுப் பொருள்களுடன் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இலங்கையின் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்ற போதிலும், அண்மைக்காலத்தில் இடம்பெற்ற மிகப்பெரும் கைது நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

தமிழக மீனவர்களின் கைது நடவடிக்கைக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். மீனவர்களை, அவர்களின் படகுகள் சகிதம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் இந்திய மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார். அத்துடன், மீனவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவும் தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். (அ-ம-26)

## நல்லிணக்க...

றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டில் போர் நிறைவடைந்து ஒருவாரம் சென்ற பின்னர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்குமாறு ஜே.வி.பி.யினராகிய நாம் பரிந்துரைத்தோம். இதற்கமைய ஆணைக்குழு அமைத்து, அவற்றின் பரிந்துரைகளை அமுலாக்கி இருந்தால், ஜெனிவாத் தீர்மானம் என ஒன்று வந்திருக்காது. இன்று அதுதொடர்பில் கதைக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்காது.

எனவே, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆணைக்குழுவின் பணியை முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்படும். அதேபோல் சுயாதீன வழக்கறிஞர் அலுவலகமும் அமைக்கப்படும்.

போரை முடிவுக்கு கொண்டுவந்த படையினரையோ அல்லது வேறு எந்தவொரு இனக்குழுமத்தையோ இலக்கு வைத்து நாங்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. நல்லிணக்கத்தை உருவாக்கவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவுமே இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டம் வெகுவிரைவில் நீக்கப்படும். சர்வதேச நியமங்கள் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டம் வரும். நிகழ்நிலைக்காப்புச் சட்டமும் மறுசீரமைக்கப்படும்' – என்றார். (அ-ம-44)

## மாணவிகளுக்கு...

மீதே அந்த ஆசிரியர் அங்க சேட்டையில் ஈடுபட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில், மாணவிகள் தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்திய நிலையில், பெற்றோரால் பாடசாலை நிர்வாகத்திடம் முறையிடப்பட்டுள்ளது. எனினும், பாடசாலை நிர்வாகம் உடன் நடவடிக்கைகளை எடுக்காததைத் தொடர்ந்தே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ம-27)

## உயிர்த்த...

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழுவில் நானும் உறுப்பினராக இருக்கின்றேன். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன நேற்று (நேற்றுமுன்தினம்) அந்தக் குழுவுக்கு வருகை தந்திருந்தார்.

நிசாம் காரியப்பர் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார் என அவர் கூறினார். இந்த நிலையில் ஊடகங்கள் எம்மைத் தொடர்புகொண்டு இதுபற்றி வினவுகின்றன. இதன் பின்னணியில் (தாக்குதலின்) இந்தியா இருந்ததது என அவர் (ரவி செனவிரத்ன) கூறவில்லை என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவர் அவ்வாறான அறிவிப்பை வெளியிடவில்லை. உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழுவுக்கு வந்து இதனை சொல்ல வேண்டியதில்லை. பிரதான சூத்திரதாரி யாரென நீதிமன்றத்திடம் சென்று கூற வேண்டும்.

இதேவேளை, தெரிவுக்குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இது தவறான விடயம் – என்றார். (அ-ம-44)

## பிரதான...

அமைய, இந்தத் தகவலை வெளிப்படுத்துவதாகவும் அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயர்நிலை நியமனக் குழுவில், உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் தான் கேள்வி எழுப்பியதாகவும், இதன்போதே, பிரதான குற்றவாளியைக் கண்டறிந்த தகவல் தனக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

## அணையா...

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவாகரத்துக்குச் சர்வதேச நீதி கோரி செம்மணி வளைவுக்கு அருகில் கடந்த கடந்த ஜூன் மாதம் அணையாவிளக்குப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'மக்கள் செயல்' எனும் தன்னார்வ அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம், நாடளாவிய ரீதியில் மட்டுமல்லாமல், சர்வதேச ரீதியிலும் பெரியளவில் பேசுபொருளானது. இந்தப் போராட்ட ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டிருந்த தூபியே தற்போது உடைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டுக்குப் பலதரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். தூபியைச் சீரமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நேற்று மாலை அந்தத் தூபி மீளவும் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-20)

## வெடுக்குநாறி...

நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் செ.சசிகுமார் மற்றும் முன்னாள் செயலாளர் து.தமிழ்ச்செல்வன் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு, வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த அறிவித்தலுக்கு அமையவே நேற்று விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆலயம் தொடர்பிலும், அந்த ஆலயத்தை மையப்படுத்தி ஏற்பட்ட பிணக்குகள் தொடர்பிலும் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TECHNO WORLD
A/L தொழில்நுட்பக் கல்லூரி

10 ஆவது வருடத்தில் தடம்பதிக்கின்றது

விசேட செயலமர்வு

11, 12, 13 October 2025

பொறியியல் தொழில்நுட்பவியல்

காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 3.15 மணிவரை

இடம் :- வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 017 5346

# ‘மாறுபாடில்லா உண்டி’ நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக்.10

சித்த வைத்தியர் தியாகராஜா சுதர்மனின் ‘மாறுபாடில்லா உண்டி’ எனும் நூலின் அறிமுகமும், கலந்துரையாடலும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது. வேளாண்மைச் செயற்பாட்டாளர் சிவகுமார் கஜந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறையைச் சேர்ந்த முத்துக்குமார் நிமியா நூல் அறிமுக உரையை ஆற்றுவார். (க-66)

# தாவரவியல் பூங்காவாக மாவீரர் துயிலுமில்லம்!

## புதுக்குடியிருப்பில் எதிர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, ஒக்.10

புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்கு முன்பாகவுள்ள தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தினை தாவரவியல் பூங்காவாக அடையாளப்படுத்துவதற்கு எதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர் கரிகாலன் குறித்த தீர்மானத்தை மாற்றுவதாக கூறியதைத் தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்தது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற போராளிகள் மாவீரர் குடும்ப நலன் காப்பக தலைவர் தெரிவிக்கையில், மாவீரர்களின் துயிலும் இல்லங்களில் அரசியற்கட்சிகள் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. அதன் தொடர்ச்சியாக இந்த தேவிபுரம் துயிலும் இல்லத்தையும் தாவரவியல் பூங்கா எனும் கட்டமைப்புக்குள் கொண்டு வர எண்ணுகின்றனர். அதற்கு ஒருபோதும் நாங்கள் சம்மதிக்கப்போவதில்லை - என்றார். (ச- 27)

“சிரஞ்சீவிச் சஞ்சிகை இதழ் 2 வெளியீடும் நூல்கள் அறிமுகமும்”

நாள் : 11.10.2025, சனிக்கிழமை, காலை 9.30

இடம் : பூரண நிலையம் (ஊரெழு கிழக்கு ஊரெழு. பலாலி வீதி. யாழ்ப்பாணம்.)

தலைமை : திரு. ந. சுப்பிரமணியம் (ஓய்வு நிலை அதிபர்)

- நூல் அறிமுகம்
- பனிமலையில் சூத்தாடிகள் : (சுவிஸ் தமிழ் நாடகக் கல்லூரி வெள்ளிவிழாப் பதிவேடு) அறிமுகவுரை தவச்செல்வி இராசன்

  ஈழத்துச் சித்தர்கள் (ஜேர்மன் மொழியிலான நூல் அறிமுகம் - கபெரியல்லா கிளவுசர்)
- சிரஞ்சீவி சஞ்சிகை வெளியீடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பூரண நிலையம் யாழ் ஊரெழு.

# ஆசிரியர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் நடத்தும் ஆசிரியர்தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசிரியர் கௌரவிப்பு மற்றும் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (க-17)


# நோயாளியை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், ஒக்.10

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த திருமதி மல்லிகாதேவி லக்ஸ்மன் என்பவர் கடந்த 14ஆம் திகதி அன்று, அவரது உறவினர் ஒருவரால் கடந்த ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி அன்று யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவமனையில் உரிய சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. எனினும் உறவினர் எவரும் பொறுப்பெடுக்காத காரணத்தால், அவரை மருத்துவமனை விடுதியில் இருந்து வீட்டுக்கு அனுப்ப முடியாதுள்ளது. எனவே உறவினர்கள் அவரைப் பொறுப்பெடுக்குமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 03 . 1947



மறைவு
09 . 10 . 2025

## செல்லையா இராசகுலேந்திரன்

**(ஓய்வுநிலை பிரதி அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)**

கணேஸ்வரம் அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராசகுலேந்திரன் அவர்கள் நேற்று (09.10.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா செல்லமுத்து தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற நடராசா மங்கையற்கரசு தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திரகாந்தியின் பாசமிகு கணவரும், இராஜகாந்த் (ஆசிரியர், யா/உடுவில் மகளிர் கல்லூரி), இராஜசந்திரிகா (கனடா), இரஜனிகாந்தன் (கனடா), இராஜகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜசிந்தினி, சுபாகர், மயூரி, அரவிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், யோகராஜா (ஓய்வுநிலை மருந்தாளர்), ஸ்ரீபாலன் (கனடா), காலஞ்சென்ற சந்திரகுமாரி, சந்திரவதனா, மதிவதனா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், தாருகா, ஆத்மிகன், ரிஷன், சேன், ஸ்ரேயன், சேயோன், சேரன், ஆஜன், அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு.**
074 073 5807

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 46462) A

# பெயர் மாற்றம்

திருவையாறு கிளிநொச்சியில் வசிக்கும் பவுலிஞகமா ஆகிய நான் எனது பெயரை பவுலின் கமலா என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பவுலின் கமலா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகிறேன்.

**பவுலின் கமலா**

(CS 59609) E

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்
# உடனடி வேலை வாய்ப்பு

**உபவிடுதிக் காப்பாளர் (ஆண்)**

எமது சங்கத்தின் பராமரிப்பில் இயங்கும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்திற்கு (ஆண்கள்) உபவிடுதிக் காப்பாளர் பணிக்காகத் தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 - 55
- கல்வித் தகமை க.பொ.த சா/தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியுடன் அல்லது அதற்கு மேற்பட்டது
- உணவு தங்குமிடம் வழங்கப்படும்.
- சம்பள அளவுத்திட்டம் 25,000(5X300)+(5X320)=28,100/= இத்துடன் ஊக்குவிப்பு தொகை மற்றும் மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்
- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டியிருக்கும்
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்.
- துறைசார்ந்த கல்வி / அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை
- கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்.

**முகாமைத்துவ உதவியாளர்(நிதி)**

**நிபந்தனைகள் / அனுகூலங்கள்**

- வயதெல்லை 25 - 45
- கல்வித் தகமை க.பொ.த உ/த (வணிகக் கல்வி) சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது
- வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கிடைக்கும்
- கணினி பயன்பாட்டு திறன் கொண்டிருத்தல்
- சம்பளம் அளவுத்திட்டம் 25,000(5×300)+(5×320)=28,100/= இத்துடன் ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும்

சுய விபரக்கோவையினை 18.10.2025 இற்கு முன்பதாக தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச்சங்கம்
கலாசாலை வீதி. திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி -021 222 6525, 0776 300 4877**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org